**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG30 – நிலை 3 – (Grade 3)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Offline Examination)
**நவம்பர் – டிசம்பர் 2019**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

## பிரிவு – 1

**I எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. **(10x1 = 10)**

1. மரம், செடி, கொடிகள் எவற்றைத் தூவி வணங்கும்?
2. வெ.இராமலிங்கனார் பிறந்த ஊர் எது?
3. திருக்குறள் எவ்வகைப் பாவைச் சார்ந்தது?
4. மன்னுதல் என்பதன் பொருள் யாது?
5. பாக்கள் எத்தனை வகைப்படும்?
6. ஞாயிறு எது போல வலம் வருகிறது?
7. கள்ளியின் வயிற்றில் பிறப்பது எது?
8. ஐந்து வேர்களுக்கு வழங்கும் பெயர் என்ன?
9. ஐம்பெருங்காப்பியங்களுள் இரண்டின் பெயர்கள் எழுதுக?
10. இரண்டாம் வேற்றுமைக்குரிய உருபு என்ன?

## பிரிவு – 2

**II எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. பாடான் திணை என்றால் என்ன?
2. நாமக்கல் கவிஞர் – சிறு குறிப்பு வரைக?
3. கோவலன் கண்ணகி திருமணத்தில் இசைக் கருவிகள் எவ்வாறு முழங்கின?
4. ஆகுபெயர் என்றால் என்ன?
5. நடுகல் என்பது என்ன?
6. மழைமுகில் கண்டு வானில் பறந்து திரிவன எவை?
7. சொல் என்பது யாது?
8. வெண்பா – சிறு குறிப்பு எழுதுக?
9. பாரதியாரின் முப்பெரும் படைப்புகள் யாவை?
10. கல்லணை எந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டது?
11. தமிழரின் அறிவியல் திறத்தைப் புலப்படுத்துவது எது?
12. கொடை வினா என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

13. எண்ணுப்பெயர்கள் மூன்றனைக் கூறுக.
14. கண், கால் இவற்றுக்கு வனப்பாவன யாவை?
15. ஏதேனும் மூன்று அணிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

**பிரிவு – 3**

**III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**
Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. பாம்பும் எள்ளும் ஒன்றே என்பதை விளக்குக?
2. வானம்பாடி பறவைகள் மழை வரும்போது செய்வனவற்றை எழுதுக.
3. பாரதியாரின் சுதந்திர தேவி பாடலின் பொருளை எழுதுக.
4. பெண்களால் முன்னேற முடியும் என்பதை பெண்கல்வி பாடல் மூலம் பாரதிதாசன் எவ்வாறு விளக்குகிறார்?
5. தற்குறிப்பேற்ற அணியை சான்றுடன் விளக்கக.
6. தமிழ் மொழியின் பதினாறு பண்புகள் எவை என பாவாணர் கூறுகிறார்.
7. "புலியை விரட்டத் துப்பில்லாதவர்கள் என்னை விரட்டுகிறார்கள்" என்று மணி சொல்லிக்கொண்டே ஓடியது ஏன்?
8. விடை எத்தனை வகைப்படும். அவை யாவை?

**பிரிவு – 4**

**IV ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**
Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. காவிரி ஆற்றின் பெருமைகளை உம் பாடப்பகுதி கொண்டு விளக்குக.
2. குற்றாலத்தின் அருவிகளின் அழகு குறித்து எழுதுக.
3. ஐவகை தொகை நிலைத் தொடர்களைப் பட்டியலிடுக.

**பிரிவு – 5**

**V ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**
Write an essay in three pages to any one of the questions. **(1x15=15)**

1. வான ஊர்த்தி என்ற புதிய கண்டுபிடிப்பு பலரது சோதனைகள் முயற்சிகள், உயிரிழப்பு இவற்றிற்குப் பின்னே கண்டறியப்பட்டது என்பதை கட்டுரை வடிவில் எழுதுக.

2. வேற்றுமை உருபுகள், அறுவகைப் பெயர்கள் எழுதி விளக்கம் கொடுத்து சரியான உதாரணம் தருக.